த.வெ.க. அரசு வழக்கறிஞர் நியமனத்தில் முறைகேடு!

லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவு!

விஜய் அரசுக்கு நெருக்கடி!

மதுரை, அக். 29-
விசாரணை நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டதில் த.வெ.க. ஆட்சியில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறி, அதுகுறித்து லஞ்ச ஒழிப்புத்துறை தீவிர விசாரணை நடத்த சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளை அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஜெகன் ராஜ் என்பவர் தாக்கல் செய்த பொதுநல வழக்கினை விசாரித்த நீதிமன்றம் இந்த முக்கிய உத்தரவை வழங்கியுள்ளது. இந்த அதிரடி தீர்ப்பு ஆளும் தமிழக வெற்றிக் கழக அரசுக்கும், முதலமைச்சர் விஜய்க்கும் கடுமையான அரசியல் பின்னடைவாகவும் பெரிய அதிர்ச்சியாகவும் பார்க்கப்படுகிறது.

வழக்கும் பின்னணியும்: என்ன நடந்தது?

கன்னியாகுமரி மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் விசாரணை நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர்களாகப் பலரை நியமித்ததில் தகுதி, அனுபவம் மற்றும் சட்ட விதிகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்றும், இந்த நியமனங்களில் பெரும் பணப் பரிமாற்றம் மற்றும் முறைகேடுகள் நடந்துள்ளதாகவும் ஜெகன் ராஜ் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

குறிப்பாக, தகுதியான வழக்கறிஞர்களைப் புறந்தள்ளிவிட்டு, ஆளும் கட்சி செல்வாக்கு மற்றும் இடைத்தரகர்கள் மூலம் லட்சக்கணக்கில் பணம் கைமாறி நியமனங்கள் வழங்கப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டன. கன்னியாகுமரி மாவட்ட அரசு வழக்கறிஞர் பதவிக்காக தவெக நிர்வாகிகள் சிலர் தரப்பில் பெருந்தொகை வசூலிக்கப்பட்டதாக மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

உயர்நீதிமன்றம் காட்டிய கடும் அதிருப்தி!

இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்ற மதுரைக்கிளை அமர்வு, விசாரணை நீதிமன்றங்களில் நடந்த இந்த வழக்கறிஞர் நியமனங்கள் மீது கடும் சந்தேகத்தையும் அதிருப்தியையும் பதிவு செய்தது. நீதிமன்றம் தனது கருத்துக்களைப் பதிவு செய்தபோது:

அரசு வழக்கறிஞர் பதவி என்பது சாதாரணப் பணி அல்ல; அது பொது மக்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் நீதி பெற்றுத் தரும் மிக முக்கியமான பொறுப்பு. பணமும் லஞ்சமும் கொடுத்து இதுபோன்ற பொறுப்புக்கு வருபவர்கள் பொதுமக்களுக்கு எப்படி நியாயமான நீதியைப் பெற்றுத் தருவார்கள்? சட்டத்தை எப்படி நேர்மையாகப் பாதுகாப்பார்கள்?

எனவே, இந்த நியமன முறைகேடு தொடர்பான புகார்கள் குறித்து தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை விரிவான மற்றும் சுதந்திரமான விசாரணை நடத்தி உண்மை நிலையை வெளிக் கொணர வேண்டும் என்று உத்தர விட்டது.

த.வெ.க. அரசுக்கும் முதல்வர் விஜய்க்கும் பெரும் பின்னடைவு!

நீதிமன்றத்தின் இந்த உத்தரவு தமிழக அரசியல் அரங்கில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. ஊழலற்ற நிர்வாகம், நேர்மையான அரசு என்ற உறுதிமொழியுடன் ஆட்சிக்கு வந்த முதல்வர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அரசுக்கு, இந்த லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை உத்தரவு மிகப் பெரிய அடியாக அமைந்துள்ளது.


நீதித்துறை தொடர்பான அரசு வழக்கறிஞர் பதவிகளிலேயே இத்தகைய லஞ்சப் புகார்கள் எழுந்து, நீதிமன்றமே லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது எதிர்க்கட்சிகளுக்குப் புதிய ஆயுதத்தைக் கொடுத்துள்ளது. அரசுத் துறைகளில் நடக்கும் நிர்வாகத் தவறுகள் மற்றும் அதிகாரிகளின் செயல்பாடுகள் குறித்து முதல்வர் விஜய் தலைமையிலான அரசு கடுமையான பொது விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழல் இப்போது உருவாகியுள்ளது.

ஒரு சாதாரணக் குடிமகனுக்கு நீதி கிடைக்க அரசு வழக்கறிஞரின் நேர்மையும் திறமையும் மிகவும் அவசியம். குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக அரசு வழக்கறிஞர்கள்தான் நீதிமன்றத்தில் வாதாடுகிறார்கள். அந்த இடத்திற்குத் தகுதி இல்லாமல், லஞ்சம் கொடுத்து ஒருவர் வந்தால், வழக்குகளில் குற்றவாளிகள் தப்பித்துவிடவும், பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு நீதி கிடைக்காமல் போகவும் வாய்ப்புள்ளது. எனவேதான், நீதிமன்றம் இந்த விவகாரத்தில் சமரசமின்றி லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணைக்கு ஆணையிட்டுள்ளது.

அடுத்தகட்ட நகர்வு!

நீதிமன்றத்தின் இந்த உத்தரவைத் தொடர்ந்து, லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் அரசு வழக்கறிஞர் நியமனக் கோப்புகள், விண்ணப்பங்கள் மற்றும் நேர்காணல் தொடர்பான ஆவணங்களைப் பறிமுதல் செய்து விசாரணையைத் தொடங்குவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த விசாரணையின் முடிவில் யார் யாருக்கு தொடர்பு இருக்கிறது என்ற விவரங்கள் வெளியாகும் போது, அது த.வெ.க. அரசு வட்டாரத்தில் மேலும் பல அதிர்வுகளை உருவாக்கக்கூடும்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; இந்த ஒரு மாசத்துல அரிசி விலை 37 சதவீதம் ஏறி இருக்கு. மூணு மாசத்துல 50 சதவீதம் ஏறி இருக்கு. விலையை குறைக்க த.வெ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லையே! கடல்ல விழுந்த கல்லு மாதிரியே இருக்கே!

போண்டி : **ஆமாய்யா; ஏன் நடவடிக்கை எடுக்கணும்? ஓட்டு வாங்கியாச்சு! சீட்ல உட்கார்ந்தாச்சு! இனி மக்களைப் பற்றி ஏன் கவலைப்படப் போறாங்க. அவங்களுக்கு கரப்ஷன், கமிஷன், கலெக்ஷனுக்கே நேரம் சரியாக இருக்கு!**

பசும்பொன் வருகை தரும் கழகத் தலைவருக்கு

திருப்புவனத்தில் சிவகங்கை மாவட்டக் கழகத்தின் சார்பில் வரவேற்பு!

மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, அக். 29-
நாளை 30ஆம் தேதி பசும்பொன் தேவர் திருமகன் குருபூஜை நிகழ்ச்சிக்கு வருகை தரும் கழகத் தலைவருக்கு சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பில் திருப்புவனத்தில் சிறப்பான வரவேற்பு தரப்பட உள்ளது.

இது குறித்து முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ளடுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30ம்தேதி தேசீயத்தையும், தெய்வீகத்தையும் ஒன்றாக கருதி தனது இறுதி நாள்வரை மக்கள் பணியாற்றி வாழ்ந்த



தெய்வீக திருமகன் பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் குருபூஜை நிகழ்ச்சியில் கழகத்தின் சார்பில் முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர், கழகத் தலைவர் தளபதி, கழக இளைஞர் அணிச் செயலாளர் சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆண்டுதோறும் கலந்துகொண்டு அவரது நினைவிடத்தில் புகழ் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

இந்த ஆண்டு நாளை (30ம் தேதி) பசும்பொன்னில் நடைபெறும் முத்துராமலிங்கத் தேவர் குருபூஜை நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக முன்னாள் முதல்வர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் மதுரையில் இருந்து கார் மூலம் பசும்பொன் செல்கிறார்.

கார் மூலம் பசும்பொன் செல்லும் கழக தலைவர் தளபதி அவர்களுக்கு நாளை காலை வெள்ளிக்கிழமை காலை 8:30 மணி அளவில் சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் திருப்புவனம் மின்வாரிய அலுவலகம் முன்பாக எனது தலைமையில் (கே.ஆர்.பெரியகருப்பன்) சிறப்பான முறையில் வரவேற்பு தரப்பட உள்ளது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர ,பேரூர் கழகச் செயலாளர்கள் சார்பணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

மதுரை வடக்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்:

மதுரை வரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு விமான நிலையத்தில் எழுச்சிமிகு வரவேற்பு!

மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை!

மதுரை, அக். 29-
மதுரை வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் திருப்பாலை குறிஞ்சி மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பி. மூர்த்தி சிறப்புரை யாற்றினார்.

அதன் விபரம் வருமாறு:-

நடந்து முடிந்த சட்ட மன்ற தேர்தலுக்குப் பின் முதல்முறையாக கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் மதுரை வருகின்றார்.

30ஆம் தேதி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெருமகனாரின் குருபூஜையில் பங்கேற்று



மரியாதை செலுத்த உள்ளார். முன்னதாக முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்ட கோரிப் பாளையத்தில் அமைந்துள்ள தேவர் சிலை மற்றும் மதுரை தெப்பக்குளத்தில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர்கள் மாமன்னர்கள் மருது சகோதரர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்.

இதற்காக 29ஆம் தேதி சென்னையில் இருந்து விமான மூலம் மதுரை விமான நிலையத்திற்கு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை 7 மணிக்கு வருகை தர உள்ளார்.

அது சமயம் வடக்கு மாவட்ட தி.மு.க.வின் சார்பாக ஆயிரக்கணக்கான கழகத்தினர் பங்கேற்று கையில் இரு வண்ணக் கொடியேந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்க வேண்டும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசன், கழக நிர்வாகிகள் அ.பா.ரகுபதி, தனச்செல்வம், நேரு பாண்டியன், ஆர்.கணேசன், வடிவேல் முருகன், சிறைச்செல்வன், பரவை மனோகரன், புதூர் சேகர், ரோகிணி பொம்மதேவன், மதிவாணன், பால ராஜேந்திரன், பசும்பொன்மாறன், ஜெயராமன், ராசாமணி, பாண்டியராஜன், சுதன், ராஜகோடி, வீரராகவன், சத்திய பிரகாஷ், முகமது யாசின், மருதுபாண்டியன், சசிகுமார், ரகுபதி, அண்ணாமலை, உமா சிங்கத்தேவன், வக்கில் முருகன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.

அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது:

அறத்திற்கு புறம்பானதாக இருக்கிறது!

மல்லை சி.ஏ.சத்யா கண்டனம்!

சென்னை, அக். 29-
"முன்னாள் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களின் கைது அறத்திற்கு புறம்பானதாக இருக்கிறது" என்று திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2021 மே மாதம் தொடங்கி 2026 ஏப்ரல் வரை ஐந்தாண்டுகள் முதலமைச்சராக இருந்த அண்ணன் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் பொற்கால ஆட்சியில் தனியார் பள்ளிகளுக்கும் மேலைநாட்டு பள்ளிகளுக்கும் சவால் விடும் வகையில் புதிய பள்ளிக் கட்டிடங்கள், நவீன தொழில்நுட்பத்தில் வகுப்பறைகள், என்று சிறப்பாக செயல்பட்டு இல்லம் தேடி கல்வி, காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தி ஏழை எளிய மக்களின் கண்ணீரை துடைத்து அதை வட அமெரிக்கா நாடான கனடா போன்ற நாடுகள் பாராட்டியதும் பாரதியின் பாட்டு வரிக்கு இலக்கணமாக கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்று நாடும்,ஏடும் போற்றிப் பாராட்டும் வண்ணம் சிறப்பாக செயல்பட்டார். அப்போதைய பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

இந்நிலையில் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம்



வழங்கியது தொடர்பான வழக்கு பதிவு செய்யப்பட்டது வழக்கைக் கண்டு ஓடி ஒளிந்து கொள்ளாமல் காவல்துறை விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி வந்த நிலையில் அவரைக் கைது செய்யவேண்டும் என்ற அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அவர் அமைச்சராக இருந்தவர் அரசியல் செல்வாக்கு படைத்தவர் வழக்கை திசை திருப்பி விடுவார் என்று உண்மைக்கு மாறான காரணங்களை சொல்லி 26/10/2026 திங்கட்கிழமை அன்று கைது செய்து சிறையில் அடைத்து இருப்பது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையே இது அறத்திற்கு புறம்பானது,

தமிழ் நாட்டில் நாள்தோறும் கொலை, கொள்ளை, போதை கலாச்சாரம், கற்பழிப்பு, ஆள் கடத்தல், இவை நடக்காதே நாளே இல்லை என்ற அளவிற்கு தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டு சந்திசிரிக்கும் நிலையில் 27/10/2026 அன்று தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் தேக்கம் பட்டி மாவட்ட சிறைச் சாலையில் இரவு நேரப் பணியில் இருந்த சிறைக் காவலர்களை தாக்கிவிட்டு கைதிகள் 17 பேர் தப்பி ஓட்டம் நாளுக்கு நாள் சினிமா பாணியில் திகில் படத் திருப்பங்கள் போன்று குற்றச் சம்பவங்கள் நடந்து கொண்டு வருகிறது அதை திசைதிருப்ப எதிர்க்கட்சிகளின் ஜனநாயக குரல்வளையை நெரிக்கும் வகையில் கைது செய்வதாக என்ன தோன்றுகிறது,

எனவே சீர்கெட்டுக் கிடக்கும் சட்டம்,ஒழுங்கை சரி செய்து மக்களுக்கு பாதுகாப்பான அரசாக செயல்பட முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் தலைமையிலான த.வெ.க. அரசை திராவிட வெற்றிக் கழகத்தின் சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் - குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!"

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பெ.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, அக். 29-
கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர், சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ் நாட்டில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர் கேட்டு இருப்பதோடு,



பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இதுபோன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. த.வெ.க அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழ்நாட்டை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசை கண்டித்து தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் வருகின்ற 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தருமபுரி, BSNL அலுவலகம் அருகில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறவுள்ளது. அதுசமயம் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக மகளிர் அணி உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பெ. பழனியப்பன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

க. சுப்பு

அக்டோபர் 29 (2011)



கழகத்தில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தவர்.

மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு கைதியாக சென்னை சிறையில் இருந்தார்.

சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக திகழ்ந்து திறம்பட பேசி வாதிட்டவர்.

கழகத்தில் தொழிலாளர் அணிச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களில் தலைவராகவும் பணியாற்றினார்.

"பகைவரையும், வசீகரிக்கக்கூடிய பேச்சாற்றலும், வாதத்திறமையும் பெற்றவர் சுப்பு" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தலைமைக் கழகம்
தி.மு.க.